14 நவம்பர் 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக் காலம் 33 ஆம் ஞாயிறு

5 ஆவது உலக ஏழையரின் நாள்

## எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்: **ஏழைகள்: திரு அவையின் புதையல்**

# ஏழைகளின் முகத்தில் கடவுளைக் காணுங்கள்



நம்மில் பெரும்பாலோருக்கு முடிவுகளை எடுக்க கடினமாக இருக்கும். இருந்தபோதும், வாழ்க்கையில் முடிவுகளை எடுப்பது தவிர்க்கமுடியாதது என்பதை நாம் நம்முடைய அனுபவங்களிலிருந்து அறிவோம்.

இந்த தொற்றுநோய்க் காலத்தில் நம்மில் பலருக்கு இந்த மாற்றம் தனிப்பட்ட அனுபவத்தை மட்டுமல்லாமல் பிறரைக் காட்டிலும், துன்பத்தையும் ஏற்படுத்தியிருக்கும். வேலை இழப்பு, எதிர்பாராத உடல்நலக்குறைவு அன்புக்குரியவர்களின் மரணம் அல்லது இதற்கு இணையான ஒன்று நம்முடைய உலத்தையே மாற்றியிருக்கும்.

இதுபோன்ற ஒரு அழிவுகரமான ஒரு மாற்றத்தைப் பற்றித்தான் இன்றைய வாசகங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. இந்த மாற்றம் ஒரு தனிமனித, சமூகத்தின் அனுபவம் மட்டுமல்ல.

உண்மையில் இது ஒரு பிரபஞ்சத்தின் அனுபவம். உலகில் நாடுகள் தோன்றிய காலத்திலிருந்து நாம் கேள்விப்பட்டிராதவாறு, அந்நாளில் வேதனைகளுக்குப் பிறகு, உலகில் கதிரவன் ஒளிகொடாது, விண்ணகம் அதிரும் என்று கேள்விப்படுகிறோம்.

நமது உலகையும் மற்றும் மற்றவர்களின் அடித்தளத்தையும் அசைத்துப்பார்க்கும் ஆழ்ந்த மாற்றத்தை நாம் அனுபவிக்கும்போதெல்லாம், நிலையான ஒன்றை நாடுகிறோம். திடமான மற்றும் உறுதியான ஒன்றை திடீரென்று கண்டுகொள்கிறோம்.

இன்றைய வாசகங்கள் நம்முடைய நம்பிக்கையை நினைவுப்படுத்துகின்றன. . இறைவனுடன் நாம் கொண்டிருக்கும் உறவு இதுபோன்ற வேளைகளில் தவிர்க்கமுடியாதது. இன்றைய நற்செய்தியில் இயேசு கூறுகிறார்: “விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும், ஆனால் என் வார்த்தைகள் ஒழியவேமாட்டா. உலகத்தை சிதறடிக்கும் மிக அதிர்ச்சிகரமான மாற்றம்தரும் அனுபவத்தின் மத்தியிலும் இறைவனின் வார்த்தை மாறாமல் நிலைத்து நிற்கும். அவருடைய வார்த்தைகள் உயிரளிக்கும் வல்லமையை ஒருபோதும் இழக்காது, அவர் நிலையானவர், நீடித்து இருப்பவர்.

நீடித்திருக்கும் ஆண்டவரின் பிரசன்னத்திலிருந்து திருப்பாடல் ஆசிரியர் அவர்தம் வலிமையைப் பெற்றுக்கொள்கிறார். “ஆண்டவரை எப்போதும் என் கண்முன் வைத்துள்ளேன். அவர் என் வலப்பக்கம் உள்ளார், எனவே நான் அசைவுறேன்” எப்போதும் ஆண்டவரை நம் கண் முன் வைத்திருக்க முயற்சி செய்வோம். ஏனென்றால், நம்முடைய பாவங்களுக்காக ஒரே பலியினால் என்றென்றைக்கும் அதை நிறைவுள்ளப் பலியாக்கினார் என்று இரண்டாவது வாசகத்தில் வாசிக்கிறோம்.

“ஏனெனில் ஏழைகள் எப்போதுமே உங்களோடு இருக்கின்றார்கள் (மாற்கு 14:7) என்னும் கருப்பொருளோடு இன்று இந்த ஆண்டின் ஐந்தாவது உலக ஏழையரின் நாளைக் கொண்டாடும் இவ்வேளையில் தங்களுடைய வாழ்க்கையின் தேவைகளுக்காக மனிதாபிமானமற்ற நிலையில் வாழவேண்டிய கட்டாயத்தில் இருக்கும் ஏழைகளின் முகத்தில் கடவுளைக் காணுமாறு திருத்தந்தை பிரான்சிஸ் நமக்கு சவால் விடுக்கின்றார்.

ஏழைகளில் கிறிஸ்துவைக் கண்டறியவும், அவர்களின் தேவைகளுக்காக குரல் கொடுக்கவும், கடவுள் அவர்களின் வழியாக தெரிவிக்கும் பேருண்மைகளை புரிந்துகொண்டு, அவர்களின் நண்பர்களாக அவர்களுக்கு செவிசாய்க்கவும் நாம் அழைக்கப்படுகின்றோம்.

ஏழைகள் எப்போதும் நம்மத்தியில் இருக்கிறார்கள். **நாமும் ஏழைகள் தான் என்று உண்மையாக நாம் சொன்னால் அது எவ்வளவு பெரிய மறைத்தூது.** ஏழைகள் நம்வாழ்வின் ஒருபகுதியாகவும், நம்முடைய மீட்பின் கருவியாகவும் இருப்பதை நம்மால் அடையாளம் காணமுடியும். ✣

மனனம் செய்ய இந்த வார வசனம்:

“இறைவா, என்னைக் காத்தருளும்; உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்”

(திபா:146:7)

**இன்றைய வாசகங்கள்:**

தானியேல்: 12: 1-3;

திருப்பாடல்: 16: 5,8-11;

எபிரேயர்: 10: 11-14, 18;

மாற்கு: 13: 24-32.

INTERNAL CIRCULATION ONLY

BUL 46/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team

api@archkl.org